# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 024/மா/2018**
**ஆணை நாள்: 12–12–2018**

05/02/2018 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி --- தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது

மண்டல அலுவலர்,
ஆலத்தூர் மண்டலம் –12,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை. --- எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி கிண்டி எம்.கே. என். சாலை பழைய சர்வே எண்.1/6, நகர நில அளவை எண்.36ல் 2–3 ஏக்கர் பரப்பில் உள்ள மாங்குளம் காணோம் என்று தலைப்பிட்டு 05/02/2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இச்செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்து முறையீட்டு மனு எண்.024/2018 என எண்ணிடப்பட்டது. சம்மந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி 12வது மண்டல அலுவலரிடம் அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மாநகராட்சி கிண்டி எம்.கே.என். சாலை பழைய சர்வே எண்.1/6 நகர நில அளவை எண்.36ல் 2.3 ஏக்கர் பரப்பில் உள்ள மாங்குளம் காணோம் என்று தலைப்பிட்டு 05.02.2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட நிலத்தை மீட்க நீர்நிலை ஆர்வலர்கள் 10 ஆண்டுகளாக போராடி வருவதாகவும், ஆனால் அனைத்து அதிகாரிகளும் அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதாகவும் ரூபாய் 1000 கோடி மதிப்பீட்டிற்கு இவ்வாக்கிரமிப்பு குளம் மாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்புகளை அகற்ற உயர் அதிகாரிகளுக்கு அனுமதி கோரி கடிதம் எழுதியும் எந்தவித ஆணையும் வரப்பெறவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் சம்மந்தமாக அறிக்கை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 15.02.2018 மற்றும் 22.11.2018 அறிவிப்பாணைகளின்படி ஆணையிடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி 12வது மண்டல அலுவலர் தனது 07.12.2018 நாளிட்ட அறிக்கையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12 வார்டு 160க்குட்பட்ட கிண்டி எம்.கே.என். சாலை பழைய சர்வே எண்.1/6 நகர நில அளவை எண்.36ல் 2.3 ஏக்கர் பரப்பில் உள்ள மாங்குளம் வருவாய் துறைக்கு சொந்தமானது என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் 05.02.2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி 12வது மண்டல அலுவலரிடமிருந்து பெறப்பெற்ற அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு மேற்படி 2.3 ஏக்கர் பரப்பில் உள்ள மாங்குளம் வருவாய் துறைக்கு சொந்தமானது என தெரிய வருவதால் வருவாய் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்து அவ்வாறே முடிவு செய்யப்படுகின்றது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. மண்டல அலுவலர்,
12வது மண்டலம், ஆலந்தூர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.1, புது தெரு, GST சாலை அருகில்
சென்னை – 600 016.
2. வட்டாட்சியர்,
Dairy Farm Road,
புனித தோமையார் மலை,
சென்னை – 600 016.
3. கோட்டாட்சியர்,
தென் சென்னை,
கிண்டி, சென்னை – 600 032.
4. மாவட்ட ஆட்சியர்,
சென்னை மாவட்டம், சென்னை.